**பிப்ரவரி – 17**

# TNPSC துளிகள்

- கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே உள்ள மருங்கூரில் வளையல்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட ஒரு சங்கு ஓடு கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- கோவில் அறங்காவலர்களை நியமிப்பதற்காக சாதியினை ஒரு பெரும் மதிப்புருவாக கருதாமல் மாறாக மத நம்பிக்கை, கடவுள் மீதான ஆழ்ந்த பக்தி மற்றும் நல்லொழுக்க நடத்தை ஆகியவற்றை முதலில் கருத்தில் கொள்ள வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.
- சர்வதேச நிர்வாக அறிவியல் நிறுவனம் (IIAS) மற்றும் நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொது மக்கள் குறைகள் துறை (DARPG) ஆகியவை இணைந்து 2025 ஆம் ஆண்டு IIAS-DARPG இந்தியா மாநாட்டினை வெற்றிகரமாக நடத்தியுள்ளன.
- 2025 ஆம் ஆண்டின் யுனானி தினத்தின் ஒரு பகுதியாக "ஒருங்கிணைந்தச் சுகாதாரத் தீர்வுகளுக்காக என்று யுனானி மருத்துவத்தில் புதுமைகள் – எதிர்கால வழிகள்" என்ற சர்வதேச மாநாடு ஆனது புது டெல்லியில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- எண்ணெய் சந்தைப்படுத்துதல் நிறுவனங்கள் ஆனது, பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவற்றின் சில்லறை விற்பனை நிலையங்களை அமைப்பதற்காக என 286 விண்ணப்பங்களில் இருந்து சுமார் 26 முதன்மை வேளாண் கடன் சங்கங்களை (PACS) தேர்ந்தெடுத்துள்ளன.
- இந்திய ரிசர்வ் வங்கி, அதன் ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ராவின் கையொப்பத்துடன் கூடிய புதிய 50 ரூபாய் நோட்டுகளை வெளியிட உள்ளது.
- ஆசியாவின் முதல் மிகவும் தத்ரூபமான இயற்கை வடிவிலான மின்னனுத் தொலைக் கட்டுப்பாட்டு வடிவிலான எல்லி எனும் யானையானது, பெங்களூருவின் செயிண்ட் ஜோசப் பள்ளியில் அறிமுகப்படுத்தப் பட்ட நிலையில் இது விலங்குகள் நலன் குறித்த செய்தியை வழங்குவதோடு மாணவர்களையும் வெகுவாக கவர்ந்தது.
- பாரிசு நகரில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு மீதான செயல் உச்சி மாநாட்டில் நடைபெற்ற முக்கிய விவாதங்களைத் தொடர்ந்து, அடுத்த உலகளாவியச் செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டினை இந்தியா நடத்தும் என்று இந்தியப் பிரதமர் அறிவித்து உள்ளார்.
- ஹிந்துஜா குழுமத்தின் தலைவர் கோபிசந்த் P. ஹிந்துஜா தொகுத்த "I Am?" என்ற புத்தகத்தினை இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் வெளியிட்டார்.

# தமிழ்நாடு செய்திகள்

## நான்காவது DISHA கூட்டம் - தமிழ்நாடு


- மாவட்ட மேம்பாடு, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு (DISHA) மீதான குழுவின் நான்காவது மாநில அளவிலான மறு ஆய்வுக் கூட்டம் ஆனது செயலகத்தில் நடத்தப் பட்டது.
- MGNREGA திட்டத்தின் கீழ் உள்ள தொழிலாளர்களுக்கு செலுத்த வேண்டிய 2,118 கோடி ரூபாய் ஊதிய நிலுவைத் தொகையினை மத்திய அரசு இன்னும் வழங்கவில்லை.
- 2023-24 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசானது 59 நாட்கள் பணி வேலைகளை வழங்கியது என்ற ஒரு நிலையில் இது தேசியச் சராசரியான 52 நாட்களை விட அதிகமாகும்.
- பிரதான் மந்திரி கிராம சதக் யோஜனா திட்டத்தினைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு

அரசானது இந்தியாவில் முன்னோடியாக இருந்துள்ளது.

- 2021-2022 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 3,61,591 வீடுகளில் மொத்தம் 3,43,958 வீடுகள் பிரதமரின் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் கட்டமைக்கப்பட்டுள்ளன.
- 2023-24 ஆம் ஆண்டில், 1,51,674 கர்ப்பிணிப் பெண்களுக்கு சுமார் 45.52 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது.
- நடப்பு ஆண்டில், முதல் குழந்தை மற்றும் இரண்டாவது மகளைப் பெற்றெடுக்கும் தாய் மார்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டது.

DISHA
Development Coordination & Monitoring Committees

## பஞ்சாயத்து அதிகாரப் பகிர்வு குறியீடு 2024




- மாநிலங்களில் பஞ்சாயத்து அமைப்புகளுக்கான அதிகாரப் பகிர்வின் நிலை (2024)- ஆதார அடிப்படையிலான ஒரு தெரிவுநிலைத் தரவரிசை என்ற ஒரு அறிக்கையானது மத்திய பஞ்சாயத்து ராஜ் துறை இணை அமைச்சரால் வெளியிடப்பட்டது.
- பஞ்சாயத்து அதிகாரப் பகிர்வு குறியீட்டின் (PDI) கீழ் அகில இந்திய அளவில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- கர்நாடகா (72.23) மற்றும் கேரளா (70.59) ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு 68.38 மதிப்பெண்களைப் பெற்றுள்ளது.
- "செயல்பாடுகள்" என்ற பரிமாணத்தைப் பொறுத்தவரை, தமிழ்நாடு மாநிலம் 60.24 மதிப்பெண்களுடன் தேசிய அளவில் அதிக மதிப்பெண்ணைப் பெற்றுள்ளது.
- தமிழ்நாட்டில், 12,525 கிராமப் பஞ்சாயத்துகள், 388 பஞ்சாயத்து ஒன்றியங்கள் மற்றும் 37 மாவட்டப் பஞ்சாயத்துகள் உள்ளன.

- தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 2021-22 ஆம் ஆண்டில் இந்த மாநிலத்தின் சொந்த வருவாயில் பஞ்சாயத்து அமைப்புகளின் வருவாயின் பங்கு 0.31% ஆக இருந்தது.
- கேரளா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மூன்று தென் மாநிலங்கள் முறையே 2.84%, 2.42% மற்றும் 0.67% என்ற பங்குடன் அதிக பங்கைக் கொண்டிருந்தன.

# தேசியச் செய்திகள்

## நான்கு கட்ட போதைப்பொருள் ஒருங்கிணைப்பு மையம் (NCORD) செயல்முறை




- சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகப் பிரச்சினையைத் தீர்க்கவும், உள்ளூர் காவல் துறை மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு முயற்சிகளுக்கு இடையேயான பெரும் ஒத்துழைப்பை மேம்படுத்தவும் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.
- நான்கு கட்ட போதைப்பொருள் ஒருங்கிணைப்பு மையம் (NCORD) என்ற செயல்முறை ஆனது நிறுவப்படும்.
- இது மத்திய மற்றும் மாநில போதைப் பொருள் சட்ட அமலாக்க முகமைகள் மற்றும் இந்தியாவில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் போதைப்பொருள் மீதான பெரும் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்தும் துறையில் உள்ள பிற பங்குதாரர்களிடையே ஒரு சிறந்த ஒருங்கிணைப்பை உறுதி செய்யும்.
- போதைப்பொருள் சட்ட அமலாக்கம் தொடர்பான தகவல்களுக்காக வேண்டி ஒரு மிக முழுமையான NCORD இணைய தளமானது உருவாக்கப்பட்டுள்ளது.
- முக்கியமான மற்றும் குறிப்பிடத்தக்க பறிமுதல்களின் விசாரணையை மிகவும் நன்கு கண்காணிப்பதற்காக, போதைப் பொருள் கட்டுப்பாட்டு வாரியத்தின் (NCB) தலைமை இயக்குநர் தலைமையில் ஒரு கூட்டு ஒருங்கிணைப்புக் குழு (JCC) அமைக்கப்பட்டு உள்ளது.
- ஒவ்வொரு மாநிலம் / ஒன்றியப் பிரதேசத்திலும் ஒரு கூடுதல் தலைமை இயக்குநர் / தலைமை ஆய்வாளர் நிலையிலான காவல்துறை அதிகாரி தலைமையில் ஒரு மிகப் பிரத்தியேக போதைப்பொருள் எதிர்ப்பு பணிக்குழு (ANTF) நிறுவப்பட்டுள்ளது.
- போதைப்பொருள் சார்ந்த தீவிரவாத வழக்குகளை விசாரிப்பதற்காக என்று 2020 ஆம் ஆண்டில் 1985 ஆம் ஆண்டு NDPS சட்டத்தின் கீழ் தேசியப் புலனாய்வு நிறுவனத்திற்கு அரசாங்கம் அதிகாரம் அளித்துள்ளது.

- 1933 என்ற 24x7 சேவை வழங்கும் கட்டணமில்லாத தேசிய போதைப்பொருள் தடுப்பு உதவி எண்ணுடன் "மடக்-பதர்த் நிஷேத் அசூசனா கேந்திரா" (MANAS) எனப்படும் தேசிய போதைப் பொருள் விலக்க அழைப்பு மையம் ஆனது உருவாக்கப்பட்டுள்ளது.
- முதன்மை ஆலோசனை மற்றும் உடனடி உதவியை வழங்குவதற்காக என்று போதைப் பொருள் ஒழிப்பிற்கான கட்டணமில்லாத உதவி எண் 14446 ஆனது அரசாங்கத்தால் பேணப்பட்டு வருகிறது.
- இந்தியாவானது மிகவும் பாதிக்கப்படக்கூடிய 272 மாவட்டங்களில் நாஷா முக்த் பாரத் அபியான் (NMBA) வசதியினை அறிமுகப்படுத்தி, பின்னர் அதனை நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் அதனை விரிவுபடுத்தியது.

## தொழிலாளர் சட்டங்களிலிருந்து விலக்கு

*Article* 33

1. Subject to the provisions of paragraph 3 of this article, a diplomatic agent shall with respect to services rendered for the sending State be exempt from social security provisions which may be in force in the receiving State.

2. The exemption provided for in paragraph 1 of this article shall also apply to private servants who are in the sole employ of diplomatic agent, on condition:

(*a*) that they are not nationals of or permanently resident in the receiving State; and

(*b*) that they are covered by the social security provisions which may be in force in the sending State or a third State.

3. A diplomatic agent who employs persons to whom the exemption provided for in paragraph 2 of this article does not apply shall observe the obligations which the social security provisions of the receiving State impose upon employers.

4. The exemption provided for in paragraphs 1 and 2 of this article shall not preclude voluntary participation in the social security system of the receiving State provided that such participation is permitted by that State.

5. The provisions of this article shall not affect bilateral or multilateral agreements concerning social security concluded previously and shall not prevent the conclusion of such agreements in the future.

- இந்தியாவில் உள்ள வெளிநாட்டுத் தூதரக அமைப்புகள் ஆனது, நாட்டின் தொழிலாளர் மற்றும் சமூகப் பாதுகாப்புச் சட்டங்களைப் பின்பற்றுவதில் இருந்து எவ்வித விலக்கும் அளிக்க முடியாது என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- வெளிநாட்டின் தூதரக நிறுவனங்களில் பணியாற்றும் அந்த இந்தியர்கள் தங்கள் பணி புரியும் முதலாளிகளுக்கு எதிராக ஒரு தொழில்துறைத் தீர்ப்பாயத்தை அணுகுவதற்கு முன், உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் 86வது பிரிவின் கீழ், அவர்கள் மத்திய அரசின் அனுமதியைப் பெற வேண்டியதில்லை.
- 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் தேதியன்று வியன்னாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் அரசுமுறை உறவுகள் மற்றும் பாதுகாப்பு மாநாட்டில் இந்தியா ஏற்றுக் கொண்ட ஒரு உடன்படிக்கைக்குச் சட்டத்தின் ரீதித் தன்மையினை வழங்கச் செய்வதற்காக வேண்டி, பாராளுமன்றமானது 1972 ஆம் ஆண்டு அரசுமுறை உறவுகள் (வியன்னா உடன்படிக்கை) சட்டத்தினை இயற்றியது.
- ஒரு தூதரக நிறுவனத்தில் பணியாற்றும் வெளிநாட்டினர் மட்டுமே சேவையினைப் பெறும் அரசின் சமூகப் பாதுகாப்புச் சட்டங்களிலிருந்து விலக்கு பெறுவார்கள் என்று உடன்படிக்கையின் 33 வது பிரிவு தெளிவாகக் கூறுகிறது.
- எனவே, அந்தச் சரத்தில் வழங்கப்பட்டுள்ள விலக்கு சேவையினைப் பெறும் அரசின் குடிமக்களுக்குப் பொருந்தாது.
- 1947 ஆம் ஆண்டு தொழில்துறை தகராறுகள் (ID) சட்டத்தின் 25Fவது பிரிவானது, ஒரு நிரந்தர ஊழியரைப் பணி நீக்கம் செய்வதற்கு முன், ஒவ்வொரு பூர்த்தி செய்யப்பட்ட பணி ஆண்டிற்கும் சுமார் 15 நாட்கள் அளவிலான சராசரி சம்பளத்திற்குச் சமமான

இழப்பீட்டை ஒரு முதலாளி வழங்க வேண்டும் என்று கோருகிறது.

## நிலக்கரி வாயுவாக்க ஊக்கத் தொகை திட்டம்

- நிதி சார் ஊக்கத் தொகை திட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களை நிலக்கரி அமைச்சகம் அறிவித்துள்ளது.
    - ஜிண்டால் ஸ்டீல் அண்ட் பவர் லிமிடெட்
    - நியூ எரா கிளீன்டெக் சொல்யூஷன் பிரைவேட் லிமிடெட்
    - கிரேட்டா எனர்ஜி லிமிடெட்
- நிலக்கரி வாயுவாக்கத்தினை நன்கு விரைவுபடுத்துதல், கார்பன் வெளியேற்றத்தை வெகுவாகக் குறைத்தல், எரிசக்திப் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் நிலையான மேம்பாட்டினை ஊக்குவித்தல் ஆகியவற்றுக்காக வேண்டி 8,500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் தேதியன்று தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் ஆனது தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசுப் பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றை நிலக்கரி வாயுவாக்கத் திட்டங்களை மேற்கொள்ள ஊக்குவிக்கிறது.





## குலுக்கல் பரிசுச் சீட்டு வரிவிதிப்பு ஆணையத்தின் விதிகள்

- குலுக்கல் பரிசுச் சீட்டுகளின் விற்பனை மீது வரி விதிக்க வேண்டி மாநில அரசுகளுக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது என்றும்  மத்திய அரசுக்கு அல்ல என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையில் உள்ள மாநிலப் பட்டியலில் உள்ள 62வது உட்சேர்ப்பின் படி, குலுக்கல் பரிசுச் சீட்டு ஆனது "பந்தயம் மற்றும் சூதாட்டம்" என்ற வரையறையின் கீழ் வருகின்றன.
- இவற்றின் மீது வரி விதிக்க மாநிலச் சட்டமன்றங்களுக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது

என்பதை தெளிவுபடுத்துகிறது.

- இந்த குலுக்கல் பரிசுச் சீட்டுகளின் பயன்பாடானது நாடு முழுவதும் ஒரே மாதிரியாக இல்லை என்பதோடு சில மாநிலங்கள் மட்டுமே இந்த குலுக்கல் பரிசுச் சீட்டுகளை அனுமதித்து, அவற்றை ஒழுங்குபடுத்துகின்றன என்ற நிலையில் மற்ற மாநிலங்கள் அவற்றை முற்றிலுமாக தடை செய்துள்ளன.
- மத்திய அரசு ஆனது 2010, 2012, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நிதிச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்து குலுக்கல் பரிசுச் சீட்டு தொடர்பான சில நடவடிக்கைகளுக்கு சேவை வரி விதிக்க முயன்றது.
- குலுக்கல் பரிசுச் சீட்டுகளின் விநியோகம், ஊக்குவிப்பு, சந்தைப்படுத்துதல் மற்றும் விற்பனை ஆகியவற்றை வரி விதிக்கக் கூடிய "சேவை" என்று மத்திய அரசு வாதிட்டது.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## 14வது AFAF மன்றம் - 2025




- 14வது ஆசிய மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்புத் தொழில்துறை மன்றம் (14AFAF) ஆனது "ஆசிய-பசிபிக் பகுதியில் கடல்சார் பொருளாதாரத்தின் மீதான பெரும் வளர்ச்சியை பசுமைமயமாக்குதல்" என்ற கருத்துருவில் புது டெல்லியில் நடைபெற்றது.
- AFAF ஆனது மலேசியாவின் கோலாலம்பூரைத் தலைமையகமாகக் கொண்ட ஆசிய

மீன்வள சங்கத்தினால் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் நிகழ்வாகும்.

- 2007 ஆம் ஆண்டு கொச்சியில் நடைபெற்ற 8வது AFAF நிகழ்விற்குப் பிறகு, இந்த நிகழ்வு ஆனது இந்தியாவில் இரண்டாவது முறையாக நடத்தப்படுகிறது.

# விளையாட்டு செய்திகள்

## தேசிய விளையாட்டுப் போட்டிகள் 2025

| Rank | State | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | SSCB | 68 | 26 | 27 | 121 |
| 2 | Maharashtra | 54 | 71 | 76 | 201 |
| 3 | Haryana | 48 | 47 | 58 | 153 |
| 4 | Madhya Pradesh | 34 | 26 | 22 | 82 |
| 5 | Karnataka | 34 | 18 | 28 | 80 |
| 6 | Tamil Nadu | 27 | 30 | 35 | 92 |
| 7 | Uttarakhand | 24 | 35 | 44 | 103 |

- 38வது தேசிய விளையாட்டு போட்டிகள் ஆனது உத்தரகாண்டில் 28 மாநிலங்கள், எட்டு ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் இராணுவப் படைகளின் விளையாட்டு கட்டுப்பாட்டு வாரியம் (SSCB) ஆகியவற்றுடன் நடத்தப் பட்டது.
- இதில் ராணுவப் படைகள் கடந்த முறையை விட அதிகமாக மூன்று தங்கம் உட்பட ஒன்பது பதக்கங்களைப் பெற்று, மொத்தம் 121 பதக்கங்களை வென்றது (68 தங்கம், 26 வெள்ளி, 27 வெண்கலம்).
- கோவாவில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டிற்கான போட்டியில் இது மகாராஷ்டிராவுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
- அதற்கு முன்னதாக, அது தொடர்ச்சியாக நான்கு தேசிய விளையாட்டுப் போட்டிகளில் (2007, 2011, 2015 மற்றும் 2022) பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் இருந்தது.
- மகாராஷ்டிரா 198 (54 தங்கம், 71 வெள்ளி, 73 வெண்கலம்) பதக்கங்களுடன் இராணுவப் படைகளை விட அதிக பதக்கங்களை வென்றது ஆனால் அது மிகவும் குறைந்த ஒரு எண்ணிக்கையிலான தங்கப் பதக்கத்தினையே வென்றது.
- ஹரியானா 153 (48 தங்கம், 47 வெள்ளி, 58 வெண்கலம்) பதக்கங்களுடன் இராணுவப் படைகளை விட அதிக பதக்கங்களைப் பெற்றது.
- தமிழ்நாடு (27 தங்கம், 30 வெள்ளி, 34 வெண்கலம்), உத்தரகாண்ட் (24 தங்கம், 35 வெள்ளி, 43 வெண்கலம்), மேற்கு வங்காளம் (16 தங்கம், 13 வெள்ளி, 18 வெண்கலம்), பஞ்சாப் (15 தங்கம், 20 வெள்ளி, 31 வெண்கலம்) மற்றும் டெல்லி (15 தங்கம், 18 வெள்ளி, 29 வெண்கலம்) ஆகியவை இதில் முதல் 10 இடங்களைப் பிடித்தன.
- ஹரித்வாரில் நடைபெற்ற ஹாக்கிப் போட்டிகளின் மகளிர் பிரிவு இறுதிப் போட்டியில் ஹரியானா மாநில அணியானது, மத்தியப் பிரதேச அணியினைத் தோற்கடித்துத்

தங்கப் பதக்கத்தை வென்றது.

- ஆடவர் பிரிவில், கர்நாடகா மாநில அணி உத்தரப் பிரதேச அணியினை வீழ்த்தித் தங்கப் பதக்கத்தை வென்றது.

☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆